Deposition of Witness
(Chapter XXV BNSS )
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.STC.No. 492 / 2021

**DEPOSITION OF PETITIONER SIDE WITNESS No.1**

| | | | |
|---|---|---|---|
| Name: | மணிகண்டன் | Calling: | ஓட்டுநர் |
| Father's Name: | நாராயணன் | Religion: | |
| Village: | சென்னாம்பேட்டை | Age: | 43 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 04.03.2026

எதிரி ஆஜர். புகார்தாரர் ஆஜர்.

பு.த.சா.1 எதிரி தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி.

எதிரியின் வங்கி கணக்கு எண் தெரியுமா என்றால் தெரியாது. எதிரியின் வங்கிக் கணக்கு கூட்டுக்கணக்கா அல்லது தனிநபர்கணக்கா என்ற விவரம் தெரியுமா என்றால் அது குறித்து தெரியாது. காசோலை வங்கியில் என்ன காரணத்திற்காக திருப்பப்பட்டது என்றால் போதிய பணம் இல்லை என திருப்பப்பட்டது. எதிரியின் காசோலைகள் தொலைந்துவிட்டது குறித்து வங்கி மேலாளர் என்ன கூறினார் என்றால் எதுவும் கூறவில்லை. நான் உமா பைனான்ஸ் சார்பாக தான் சட்டஅறிவிப்பு அனுப்பினேன் என்றால் இல்லை. எதிரி பதிலறிவிப்பு அனுப்பினாரா என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் அனுப்பிய அறிவிப்பை எதிரி பெற்றுக்கொண்டாரா என்ற விவரம் தெரியுமா என்றால் வழக்கறிஞருக்குத்தான் தெரியும். எதிரிக்கு அனுப்பிய வீட்டு முகவரி நினைவுள்ளதா என்றால் இல்லை. நான் அனுப்பிய முகவரியில் எதிரி வசிக்கவில்லை என அறிவிப்பு திருப்பப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது. காசோலை திருப்பப்பட்ட பின் நான் அது குறித்து எதிரியிடம் சென்று கேட்டேனா என்றால் இல்லை. வழக்கறிஞர் அறிவிப்பில்

எதிரியிடம் நான் காசோலை திருப்பப்பட்டது குறித்து கேட்டேன் என கூறியுள்ளேன் என்றால் 2021ல் கேட்டுள்ளேன்.

உமா பைனான்ஸ் சார்பாக தான் வழக்கறிஞர் நியமித்துக்கொடுத்தார் என்றால் இல்லை, நான் தான் பார்த்தேன். நான் எந்த காலத்திலும் உமா பைனான்சில் வேலை செய்யவில்லை என்றால் சரிதான். உமா பைனான்ஸ் ஓனரை அழைத்து விசாரித்தால் தான் நான் அங்கு வேலை செய்தேனா என்ற விவரம் தெரியவரும் என்றாலும், அவரை அழைத்து விசாரிப்பதில் எனக்கு எதுவும் ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான். நான் உமா பைனான்ஸில் வேலை செய்ததால் அவர் சொல்லி தான் இந்த வழக்கை தனிநபர் வழக்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் எனக்கும் நேரடி தொடர்பு கிடையாது என்றால் சரியல்ல. நான் பணம் கொடுத்ததற்கு சாட்சி யாரும் இல்லை என்றால் அவர் காசோலை கொடுத்தார், நான் பணம் கொடுத்தேன், சாட்சி யாரும் இல்லை. நான் ரூ.1,00,000/–கையில் வைத்திருந்ததற்கான ஆவண சாட்சியம் எதுவும் இல்லை என்றால் சரிதான். எதிரி காசோலை என்னிடம் கொடுக்கவில்லை என்றாலும், உமா பைனான்ஸில் கொடுத்த காசோலையை வைத்து தான் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

உமா பைனான்ஸில் வாங்கிய கடன் முழுவதையும் எதிரி அடைத்துவிட்டார் என்றாலும், அதற்காக நோட்புக் அனைத்தும் முடித்து கொடுத்துவிட்டார்கள் என்றாலும் அது குறித்து எனக்கு தெரியாது. உமா பைனான்ஸில் காசோலையை எங்கோ மறந்து வைத்துவிட்டோம் என கூறிவிட்டு நான் அவர்களிடம் வேலை செய்வதால் தற்போது அந்த காசோலையை வைத்து இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி என்ன வேலை செய்கிறார் என்றும், எதிரியின் குடும்ப நபர்கள் யார் என்றும் எனக்கு தெரியாது என்றால் எதிரி பிரகாஷ் என்ற பெயரில் மளிகை கடை நடத்தி வருகிறார். அது குறித்து புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் மளிகை கடை நடத்தி வருகிறார் என கூறியுள்ளேன், பிரகாஷ் என குறிப்பிடவில்லை. எதிரி பிரகாஷ் என்ற பெயரில் மளிகை கடை நடத்தவில்லை என்றாலும், அவர் STP Security Service, Amburல் வேலை செய்கிறார் என்றாலும் அது குறித்து தெரியாது.

எதிரியை குறித்த எந்த தகவலும் தெரியாமல் உமா பைனான்ஸ் சொன்னதின் அடிப்படையிலும், அவர்களுக்கு தான் அனைத்துவிவரங்களும் தெரியும் என்றால் அதை பற்றி எனக்கு

தெரியாது. எதிரி எனக்கு எவ்வளவு நாளாக பழக்கம் என குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். காசோலை வழக்கில் பணம் கொடுப்பவருக்கும் வாங்குபவருக்கும் உறவு முறை இருக்கவேண்டும் என்றாலும், அவ்வாறு இவ்வழக்கில் இல்லை என்றாலும், எனவே, எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) மணிகண்டன்

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K